Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 28 (13-12-1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை 299

## கிராம சேவையாளரிடம் நற்சான்றிதழ் இல்லை

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள கிராமசேவையாளர்களிடம் விண்ணப்பதாரிகளுக்கு வழங்குவதற்குரிய நற்சாட்சி சான்றிதழ் படிவங்கள் இல்லை என அறியபபடுகிறது. அண்மையில் கல்விச்சேவை ஆணைக்குழுவினால் நேர்முகப் பரீட்சைக்கு கொட்டகலைக்கு அழைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு கிராமசேவையாளரினால் ஒப்பமிடப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதி செய்யப்பட்ட நற்சாட்சி சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நிலவும் இத் (4 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தம் இன்றிப் பேச்சுவார்த்தை

# அரசின் யோசனை புலிகளால் நிராகரிப்பு

## தமிழர் நலனை பாதிக்கும் திட்டம்

[யாழ்ப்பாணம்]

போரை நிறுத்தி, சமாதான சூழ்நிலையை உருவாக்கி, விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த பிரேமதாசா அரசாங்கம் விருப்பவில்லை. யுத்த நிறுத்தம் செய்யாமல், போரை தீவிரமாக நடத்திக்கொண்டு புலிகளுடன் இரகசியமாகப் பேசுவதற்கு அரசாங்கம் விரும்புகிறது. அரசின் இந்த முரண்பாடான, நடைமுறைச் சாத்தியமற்ற, ஆபத்தான அணுகுமுறையை விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரித்துள்ளது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வமான பேச்சாளர் தெரிவித்தார். ஈழநாதத்திற்கு அளித்த விசேட போட்டியின் போது, 'போருடன் பேச்சுக்கள்' என்ற இந்த யோசனை குவேக்கர்ஸ் சமாதானக் குழு வாயிலாக புலிகளுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், இந்த அடிப்படையில் பேச்சுக்களை நடத்த புலிகள் இயக்கம் மறுத்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரேமதாசா அரசாங்கத்தின் இந்த அணுகுமுறை பற்றியும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இந்த நிலைப்பாடுபற்றியும் புலிகள் பேச்சாளர் மேலும் கூறியதாவது:

"போர் நிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தைகளுக்கும் விடுதலைப் புலிகள் தயார் என்பதை நாம்நீண்டகாலமாகவே வலியுறுத்திவருகிறோம் அன்றும் இன்றும் எமது நிலைப்பாடு ஒன்றுதான். நாம் சமாதானத்தின் கதவுகளை மூடிவிடவில்லை என்பதை தலைவர் பிரபாகரன் பகிரங்க அறிக்கைகள் மூலம் வலியுறுத்தி வருகிறார்.

"பேச்சுவார்த்தைகளுக்கு முதற்படியாக போர் நிறுத்தம் செய்து கொள்ளப்படுவது அவசியமானது. சமாதான சூழ்நிலை உருவாகாமல், நல்லெண்ணத்தின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை நடத்த முடியாது. அப்படி செய்து கொள்ளப்படும் போர் நிறுத்தமும் எமக்கு பாதகமாக அமையாமல், எமது மக்களின் நலனைப் பேணுவதாக (4ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு அறிக்கையை ஒருவாரத்தில் சமர்ப்பிக்கும்?

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழு ஒரு வாரத்தில் அதன் அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்க உள்ளதாக ஏ. எவ். பி. செய்தியாளர் தெரிவித்துள்

"சிங்கள அரசியல் வாதிகளை சமஷ்டி தீர்வை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியாத நிலையிலும், தமிழ்க் குழுக்களை வடக்கு-கிழக்கு இணைப்பைக் கைவிடச் செய்ய முடியாத நிலையிலும் தெரிவுக்குழு

கொண்டுள்ளதாகவும் உத்தியோகப் பற்றற்ற செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது" எனசெய்தி

## நொச்சிமோட்டையில் படைசூடு

## 4 பயணிகள் படுகாயம்

### பொருள்களையும் கைவிட்டு மக்கள் ஓட்டம்

(வவுனியா)

பயணிகள் மீதான துப்பாக்கிப் பிரயோகம் வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட போது நான்கு தமிழ்ப் பயணிகள் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் நகருக்குச் செல்வதற்காக நொச்சிமோட்டை பகுதி நோக்கிச் சென்ற பயணிகளே காயமடைந்தனர். பல பயணிகள் நிலத்தில் வீழ்ந்து படுத்து மயிரிழையில் உயிர் தப்பினார்கள்.

என். பார்த்தசாரதி என்ற புதுவிளாங் குளம் பாடசாலை ஆங்கில ஆசிரியருடன் மேலும் மூவர் காயமடைந்தனர். இவர்கள் தற்போது வைத்திய சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் நொச்சிமோட்டைப் பகுதியில் சில [illegible]டைக [4 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்புநகர் பகுதியில் 1000 தமிழ் இளைஞர் கைது

கொழும்பிலுள்ள 19 பொலிஸ் பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பொலிசாரால் ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள லொட்ஜ்கள், விடுதிகள், வீடுகள் ஆகியவற்றிற்குள் இரவு வேளைதிடீர் திடீரெனப் புகுந்த பொலிசார் இடம் பெயர்ந்து கொழும்பில் கல்விபயிலும் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரைக் கைது செய்தனர்.

புறக்கோட்டை பகுதியில் 275 பேரும், வாழைததோட்ட பகுதியில் 270 பேரும். வெள்ளவத்தையில் 193 பேரும் பம்ப [4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவக் காவலரண் மீது

# மணலாற்றில் புலிகள் தாக்கு

தெரிவித்தார்.

பிரேமதாசா அரசாங்கத்தின் இந்த அணுகுமுறை பற்றியும், விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் இந்த நிலைப்பாடு பற்றியும் புலிகள் பேச்சாளர் மேலும் கூறியதாவது:

''போர் நிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தைகளுக்கும் விடுதலைப் புலிகள் தயார் என்பதை நாம் நீண்டகாலமாகவே வலியுறுத்துவருகிறோம் அன்றும் இன்றும் எமது நிலைப்பாடு ஒன்றுதான். நாம் சமாதானத்தின் கதவுகளை மூடி விடவில்லை என்பதை தலைவர் பிரபாகரன் பகிரங்க அறிக்கைகள் மூலம் வலியுறுத்தி வருகிறார்.

''பேச்சுவார்த்தைகளுக்கு முதற்படியாக போர் நிறுத்தம் செய்து கொள்ளப்படுவது அவசியமானது. சமாதான சூழ்நிலை உருவாகாமல், நல்லெண்ணத்தின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை நடத்த முடியாது. அப்படி செய்து கொள்ளப்படும் போர் நிறுத்தமும் எமக்கு பாதகமாக அமையாமல், எமது மக்களின் நலனைப் பேணுவதாக

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்புநகர் பகுதியில் 1000 தமிழ் இளைஞர் கைது

கொழும்பிலுள்ள 19 பொலிஸ் பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பொலிசாரால் ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள லொட்ஜ்கள், விடுதிகள், வீடுகள் ஆகியவற்றிற்குள் இரவு வேளைதிடீர் திடீரென புகுந்த பொலிசார் இடம் பெயர்ந்து கொழும்பில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரைக் கைது செய்தனர்.

புறக்கோட்டை பகுதியில் 275 பேரும், வாழைத்தோட்ட பகுதியில் 270 பேரும். வெள்ளவத்தையில் 193 பேரும் பம்ப

(4ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவுக்குழு அறிக்கையை ஒருவாரத்தில் சமர்ப்பிக்கும்?

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழு ஒரு வாரத்தில் அதன் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க உள்ளதாக ஏ. எவ். பி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

''சிங்கள அரசியல் வாதிகளை சமஷ்டி தீர்வை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியாத நிலையிலும், தமிழ்க் குழுக்களை வடக்கு-கிழக்கு இணைப்பைக் கைவிடச் செய்ய முடியாத நிலையிலும் தெரிவுக்குழு தனது கூட்டத்தை முடித்துக் கொண்டுள்ளதாகவும் உத்தியோகப் பற்றற்ற செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது'' எனசெய்தியாளர் தெரிவித்தார்.

# இராணுவக் காவலரண் மீது மணலாற்றில் புலிகள் தாக்கு

## ஆயுதம், வெடிபொருள்கள் மீட்பு

(மணலாறு)

மணலாறு பகுதியில் சிறிலங்கா இராணுவ காவலரண் மீது விடுதலைப்புலிகள் நேற்று திடீர் தாக்குதல் ஒன்றை நடாத்தினர். இத்தாக்குதலின் போது இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது

மணலாறு முந்திரிகைக்குள இராணுவ முகாமிற்கும், சிலோன தியேட்டர் இராணுவ முகாமிற்கும் அண்மையில் அமைந்திருந்த காவலரண் ஒன்றின் மீது நேற்று காலை 6.30 மணியளவில இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதல் சுமார் 20 நிமிட நேரம் வரை நீடித்தது.

இத்தாக்குதலின்போது ஆறு விடுதலைப்புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்

இத்தாக்குதலின் போது இராணுவத்தினரிடமிருந்து பின்வரும் ஆயுதங்கள் வெடிப்பொருள்கள் விடுதலைப் புலிக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



மேஜர் வித்தியாதரன் (டேவிட்)

மட்டக்களப்பு மணல்பிட்டிக்கு விடுதலைப் புலிகள் போராளிகள் சென்று திரும்பும்போது செம்பூரில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடாத்தியபோது ஏற்பட்ட மோதலில் மேஜர் வித்தியாதரன் டேவி (இரட்ணசிங்கம் அரசரெட்ணம் அம்பிலாந்துறை மட்டக்களப்பு) என்னும் போராளி வீரச்சாவு அடைந்தார். இச்சம்பவம் 10-12-92 அன்று காலை 8.30 மணியளவில் இடம் பெற்றது.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# ஆறு புலிகள் வீரச்சாவு

மணலாறு பகுதியில் முந்திரிகைக்குள இராணுவமுகாம் காவலரண்கள் மீது நேற்றுக் காலை 6 30 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த லெப்டினன்ட் வரதன்/மைகல் (முத்துராஜா குமாரசிங்கம், பணிப்புல் குளம் வட்டக்கண்டல், மன்னார்), லெப்டினன்ட் மணியன்/சுகுமார் (கந்தசாமி செல்வராஜா, சந்திவெளி, மட்டக்களப்பு), லெப்டினன்ட் மறைக்கோன்/ சிறிகரன் (முத்துவேல் விஜயகுமார், வாழைச்சேனை, மட்டக்களப்பு), லெப்டினன்ட் முத்தழகு / டியூட்டோன் (காசிப்பிள்ளை சசிக்குமார்,

(4ஆம் பக்கம் பார்க்க)

# தனி மாகாண சபைகளே இனப்பிரச்சினைக்கு தீர்வாம்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் இணைக்காமலும் ஒன்பது மாகாணங்களுக்கும் இந்திய மாநிலங்களுக்கு உள்ளது போன்ற அதிகாரங்களை வழங்கியும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கருத்தொருமைப்பாடு காண முன்வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும் ஒற்றையாட்சி அமைப்புக்கு பதிலாக சமஷ்டி அரசியலமைப்பை கொண்டுவருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கும் இக்கட்சிகள் அதிகாரப்பரவலாக்கல் மூலமும், அதிகாரப்பரவலாக்கலுக்கான அலகு மாகாணமாக இருக்க வேண்டுமெனவும் இக்கட்சிகள் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது

# கொழும்பில் கைதான உதவி நிதியாளரை விடுவிக்க பல்கலை அதிகாரிகள் முயற்சி

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் கைதாகிய யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர் திரு எஸ். காந்தமூர்த்தியை விடுதலைசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பல்கலைக்கழக பதிவாளர் நாளை கொழும்பு செல்வார் என பல்கலைக்கழக வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

யாழ் பல்கலைக்கழக உதவி நிதியாளர் கூட்டுப்படைத் தலைமையகத்தின் உத்தரவின்

(4ஆம் பக்கம் பார்க்க)

# அகதிமுகாம் சுகாதார சீர்கேடு அரசிற்கு அறிவிக்க முயற்சி

(யாழ்ப்பாணம)

யாழ் மாவட்ட அகதி முகாம்களில் ஏற்பட்டுள்ள சுகாதாரச் சீர்கேடுகள் மற்றும் போஷாக்கின்மை சம்பந்தமான பூரண விபரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படடுள்ளது.

இதன் மற்றுமொரு பிரதி கொழும்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கும் சமர்ப்பிக்கபபட உள்ளது.

நேற்று யாழ் செயலகத்தில் யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தலைமையில நடைபெற்ற யாழ். மாவட்ட அகதிமுகாம்களில் ஏற்பட்டுள்ள சுகாதார சீர்கேடுகளை நிவர்த்தி செய்வது சம்மந்தமாக ஆராய கூட்டப்பட்ட கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட அகதிமுகாம்களில் பொதுவாக குடிதண்ணீர்ப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை, போஷாக்கின்மை அதி

(4ஆம் பக்கம் பார்க்க)

# இரத்தம் தேவை

யாழ் போதனா வைத்தியசாலை சிறுவர் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள குழந்தை ஒன்றிற்கு இரத்தம் அவசரம் தேவைப்படுகிறது.

யாராவது இரத்தம் வழங்கினால் மட்டுமே இரத்த வங்கியிலிருந்து அதே அளவு குழந்தைக்கு தேவையான பிரிவு இரத்தம் வழங்கும் நடைமுறை இருப்பதால் பண்டிதர் குடியிருப்பைச் சேர்ந்த இவ் 9மாத குழந்தைக்கு நலன் விரும்பிகள் யாராவது இரத்த தானம் வழங்க முன்வருமாறு பெற்றோர் கேட்டுக் கொள்கின்றனர்.

# பொது நலவாய அமைப்பு அங்கத்தவர் விசாரணைக்குழு நியமிக்குக

## - லலி கொப்பேகடுவ கோரிக்கை

(கொழும்பு)

அராலித்துறைக் கண்ணி வெடியில் கொல்லப்பட்ட டென்சில் கொப்பேகடுவவின் மரணம் தொடர்பான சர்வதேச விசாரணைக் குழுவிற்கு பொது நலவாய அமைப்பின் அங்கத்தவர்களையே திருமதி கொப்பேகடுவ விரும்புகிறார்.

இவ் விடயம் தொடர்பாக திருமதி லலி கொப்பேக்கடுவ அரசாங்கத்துக்குக் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார். இக்கடிதத்தின்படி தமது கணவரின் மரணம் தொடர்பான சர்வதேச விசாரணைக் குழுவை நியமிக்கும் போது பொதுநலவாய அமைப்பிலிருந்து அங்கத்தவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற தனது விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்.

ஆங்கில தட்டெழுத்தாளர்கள் தேவை

வேலை நேரம்: இரவு 18.00 - 2 00

அனுபவம் வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கவும்

விண்ணப்பங்களை 20-12-1992 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்

கணணி அறிவு உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- விளம்பர இலக்கம்: 180
மே/பா. ஈழநாதம்,
31 மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5572)

## வரி விளம்பரம்

### பற் சிகிச்சை நிலையம்

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில். கே. கே. எஸ். வீதி, கொக்குவில். தினசரி 4 பி ப — 6 பி ப ஞாயிறு 10 மு. ப — 2 பி . ப (3231)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5510)

### வாடிக்கையாளருக்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றரிகளும் எம்மிடம் உண்டு டில்காவாச் & றேடியோ வேக்ஸ் தென்மராட்சியில்சகல வங்கிகளுக்கு அருகாமையிலும் எமது கிளைகள் உள்ளன. சாவகச்சேரி. (சி- 5560)

### பயிர் நோய்தாக்கமா?

நீமியா உரம் நோய் தடுப்பு பூச்சிகொல்லி ஆகவும் உதவுகிறது. நீரில்ஊறவைத்துவடித்த சாரத்தைப் பயிர்களில் தெளித்து பயன்காணுங்கள். நீமியா உரம் அண்ணாகோப்பிககடைகளிலும் விற்பனையாகின்றது. "மில்க்வைற்" (சி/5580)


## ஒளிவிழா

[குருநகர்]

நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களினால் மாதகல் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து ஆனைக்கோட்டைப் பகுதியில் தங்கியிருக்கும் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் - அப்பகுதி இளைஞர்கள், யுவதிகள் சிறுவர்களுடன் இணைந்து கிறிஸ்மஸ் ஒளிவிழா இன்னிசைக் கலைக் கதம்ப நிகழ்ச்சியினை சண்ஸ்ரார் கழகத்தின் ஆதரவுடன் வழங்கினர். (21)

விரும்பிய இடத்திற்கு மாற்றம்

# 3 வருடம் சேவையாற்றிய ஆசிரியருக்கு சந்தர்ப்பம்

(கொழும்பு)

மூன்று வருடகால ஆசிரிய சேவையை முடித்துக்கொண்ட ஆசிரியர்கள் தாங்கள் விரும்பிய மாவட்டத்திற்கு மாற்றம் பெறமுடியும் என கல்விச் சேவைகள் அமைச்சின் செயலாளர் ஜோஜ் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதன் படி 1989 ஆம் ஆண்டு பட்டதாரிகளாக நியமிக்கப்பட்ட சுமார் 6000 ஆசிரியர்களும் தாம் விரும்பிய மாவட்டத்திற்கு மாற்றம் பெற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இவர்கள் வெற்றிடத்தை நிரப்புவதற்கு இம்மாதம் நியமனம் பெற இருக்கும் பட்டதாரிகளை நியமிக்கஉள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தாம் விரும்பிய பாடசாலைகளின் வெற்றிடங்கள் இல்லாத சமயத்தில் அம் மாவட்டத்தில் அவர்களுக்கு அண்மித்த பாடசாலைகளில் நியமனம் வழங்கப்படும் என உறுதி அளித்தார்.

## கடன் வழங்குவதில் அரச வங்கிகள் தயக்கம்

[நமது நிருவர்]

மத்திய வங்கி அனுமதி வழங்கிய போதிலும் யாழ். மாவட்ட வங்கிக் கிளைகள் நடுத்தரகுறுங்கால கடன்களை வழங்க தயங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு விவசாயம் மற்றும் மீன்பிடி துறைகளுக்குத் தேவையான கடன்களை வழங்குவதற்கு வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைததீவு. மாவட்டங்களுக்கும் மத்திய வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் இங்கு இயங்கும்இலங்கை வங்கிகள் இக்கடன்களை வழங்காது இழுத்தடிப்பதாக தெரிவிக்கப்படுகிறது இக்கடன்களை பொதுமக்களுக்கு வழங்கினால் மீளப்பெற முடியுமா என்ற சந்தேகமே இதற்கு காரணம் என கூறப்படுகிறது.

தற்போது இத்தகைய கடன்களை வழங்குவதாயின் வழங்கப்படும் அக்கடன்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பொறுப்பேற்க வேண்டும் என வங்கி முகாமையாளர்கள் வற்புறுத்தி வருவதாக அறியவருகிறது.

## உப்பள ஊழியர்களுக்கு சம்பளம் இன்னுமில்லை

(கொழும்புத்துறை)

கொழும்பில் தலைமைச் செயலகத்தின் கீழ்செயற்பட்டு வரும் சிறிலங்கா உப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த வடபகுதி ஊழியர்களுக்கு இவ்வருடம் தை மாதத்தில் இருந்து மார்கழி மாதம் வரை 12மாதங்களாக எதுவித வேதனமும் வழங்கப்படவில்லை என உப்புக் கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் ஆழ்ந்த கவலையும் மனவேதனையும் அடைந்துள்ளனர்.

கொழும்புத் தலைமைச் செயலகத்துடன் ஊழியர்கள் பலதடவைகள் நேரிலும் கடித மூலமும் தொடர்பு கொண்டும் இன்றுவரை எதுவித கொடுப்பனவுகளும் தமக்குக் கிடைக்கவில்லை எனக் கவலை தெரிவித்துள்ளார்கள். (24)

## பிரார்த்தனை

மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினர் நாட்டில் அமைதி நிலைபெற வேண்டுமென வேண்டி 135 நாட்களுக்கு தொடர்ச்சியாக பிரார்த்தனை செய்ய உத்தேசித்துள்ளனர். மட்டுவில் கல்வம் சிவன் ஆலயத்தில் சிவஸ்ரீ குமரகுரு சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் இப் பிரார்த்தனை இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## பொதுச்சபை கூடுகிறது

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்க விசேட பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு சூ. சிறில் தலைமையில் 19-12-92 சனிக்கிழமை மு ப. 9-30 மணிக்கு இல. 291 ஸ்ரான்லி வீதியிலுள்ள சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக இதன் செயலாளர் ஊர் பு நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

இப் பொதுக்கூட்டத்தில் புதிய பணிப்பாளர் தெரிவு இடம்பெற உள்ளதுடன் கூட்டுறவுச்சங்க உபவிதித் திருத்தமும் இடம்பெற உள்ளது. இப் பொதுக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு லிங்கநாதன் உரை நிகழ்த்த உள்ளார்.

### சமய தீட்சை

சந்திரபுரம் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டின் கீழ் மட்டுவில் அம்பலந்துறை கந்தசாமிகோவிலில் சிவஸ்ரீசிதம்பரநாதக் குருக்கள் அவர்களால் அடியார்களுக்கு சமயதீட்சை வழங்கும்வைபவம் இடம்பெறவுள்ளது. இந்தவைபவம்இன்று காலையில் இடம் பெறும்.

### சுருக்கெழுத்து பயிற்சி விண்ணப்பம் கோரல்

(பருத்தித்துறை)

பாடசாலையைவிட்டுவிலகிய இளைஞர் யுவதிகளின்நன்மை கருதிவடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் 6 மாத கால சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பொன்றை நடாத்தி உதவவுள்ளது இப்பயிற்சி வகுப்பு தைமாதம் 1ஆம் திகதி (1993 ஆரம்பிக்கப்படவுள்ளது

க. பொ. த (சா/த) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் ஆங்கிலம், கணிதம் உட்பட 6

## பாலர் பாடசாலைகளுக்கு உபகரணங்கள் விநியோகம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட உள்ளூராட்சி திணைக்களத்தினால யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களினால் நடாத்தப்பட்டுவரும் பாலர் பாடசாலைகளுக்குத் தேவையான கற்பித்தல் உபகரணங்கள் தற்போது திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது

உள்ளூராட்சி இலாகாவின் பாலர் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் இக் கற்பிக்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதாக யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார்.

இக் கற்பிக்கும் உபகரணங்களைப் பெறவிரும்பும் சனசமூக நிலையத்தினர் அதிகாரக் கடிதம் சமர்ப்பித்து திணைக்களத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும்படி அவர் கூறியுள்ளார். 24)

### சான்றிதழ் வழங்கப்பட்டது

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சார்பில் இவ்வருடம் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலங்களில் தொண்டு செய்த இந்து இளைஞர் மன்றங்களின், பாடசாலைகளின் தொண்டர்களுக்கான சான்றிதழ்கள் யாழ். மாநகராட்சி மன்றத்தால் பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டது.

தொண்டர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ். கந்தர் மடம் ஸ்ரீ சிவ குரு நாத குரு பீடம் வேதாந்த மடத்தில் பேரவைத் தலைவர் திரு வே கெ தனபாலன் தலைமையில் நடைபெற்றது. (24

### "குமண" 18 இல் வரும்

(யாழ்ப்பாணம்)

மீண்டும் "குமண" கப்பல் கொழும்பில் இருந்து யாழ். குடாநாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 18-ம் திகதி பருத்தித்துறையை வந்தடையும் என தெரியவருகின்றது.

தற்பொழுது "மெரினால்" கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தில் உணவுப் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கின்றது இது இறக்கி முடிந்ததும் காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் "குமாரி" கப்பல் அங்கு பொருள்களை இறக்கும் என யாழ். செயலகம் அறிவித்துள்ளது. (பா)

### திருமுறை முற்றோதல்

(பருத்தித்துறை)

புலோலி பசுபதீஸ்வரர்(சிவன் கோவில்) ஆலயத்தில்திருமுறை முற்றும் ஓதல் பூர்த்தி விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது மாலை சாயரட்சை பூசை இடம் பெற்று தொடர்ந்து நாயன்மார் நால்வருக்கும் விசேட பூசைகள் நடைபெற்று நாயன்மார்கள் வீதி உலா வந்தார்கள். (25)

### கபடி சுற்றுப் போட்டி

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைக்காக வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பருத்தித்துறை கொட்டடி மாவீரர்களின் நினைவாக பருத்தித்துறை

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

திருநெல்வேலி பகுத்தறிவகம் சனசமூக நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஆறு மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் வே. தருமலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

## கிடுகுகள் அன்பளிப்பு

வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் ஏழு குடும்பங்களுக்கு யாழ் சர்வோதயக் கிளையினர் கிடுகுகளை அன்பளிப்பு செய்துள்ளனர்.

இராசாவின் தோட்ட வீதியில் வாழ்ந்து வரும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட வாழ்க்கைத் தரத்தையுடைய ஏழு குடும்பங்களுக்கு, மழைக் காலத்தை முன்னிட்டு தலா அறுநூறு கிடுகுகள் வீதம், சர்வோதயம் வழங்கியுள்ளது.


* அந்தியேட்டிககுத் தேவையான 12" x 1" Recopy புகைப்படங்கள்
* நினைவஞ்சலி, கல்வெட்டு, புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line Tone, Colour Blocks
* Photo Polymer (பிளாஸ்ரிக்Blocks)
* றபர் சீல
* ஓவிய வேலைகள்

## மின்பிறப்பாக்கி (ஜெனறேற்றர்) தேவை

25 கோஸ் மின்னிற்கு மேல் பிறப்பிக்கக் கூடிய மின்பிறப்பாக்கி உள்ளவர்களிடமிருந்து விற்பனைக்கு கோரப்படுகிறது. உரிமையாளர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம், வடமாகாண தெங்கு பனம் பொ. கூ. சங்க சமாசம், 499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். மின்பிறப்பாக்கி பார்வையிட்டு, தகுந்த விலை கொடுத்துப் பெற்றுக் கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
யாழ்ப்பாணம்.
[சி/5528]

## மலிவு விற்பனை

[Clearing Sale]

★ ஆண்டு-6 அனுமதிப் பரீட்சை
★ O/L
★ A/L விஞ்ஞானபாடங்கள்

50வீத சிறப்புக்கழிவு விலையில் மேற்படி வகுப்புக்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**BOND**
யாழ்ப்பாணம் (சி-5575)

த்து பயன்காணுங்கள். நீமியா உரம் அண்ணாகோப்பிககடைகளிலும் விற்பனையாகின்றது.
''மில்க்வைற்'' (சி/5580)

சேர்ந்த ஊழியர்கள் ஆழ்ந்த கவலையும் மனவேதனையும் அடைந்துள்ளனர்.

கொழும்புத் தலைமைச் செயலகத்துடன் ஊழியர்கள் பலதடவைகள் நேரிலும் கடித மூலமும் தொடர்பு கொண்டும் இன்றுவரை எதுவித கொடுப்

ளுக்கு ... பிரார்த்தனை செய்ய உத்தேசித்துள்ளனர். மட்டுவில் கல்வம் சிவன் ஆலயத்தில் சிவஸ்ரீ குமரகுரு சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் இப் பிரார்த்தனை இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

நாதக் குருக்கள் அவர்களால் அடியார்களுக்கு சமயதீட்சை வழங்கும்வைபவம் இடம்பெறவுள்ளது. இந்தவைபவம்இன்று காலையில் இடம் பெறும்.

# ஒளிவிழா

[குருநகர்]

நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களினால் மாதகல் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து ஆனைக்கோட்டைப் பகுதியில் தங்கியிருக்கும் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் - அப்பகுதி இளைஞர்கள், யுவதிகள் சிறுவர்களுடன் இணைந்து கிறிஸ்மஸ் ஒளிவிழா இன்னிசைக் கலைக் கதம்ப நிகழ்ச்சியினை சண்ஸ்ரார் கழகத்தின் ஆதரவுடன் வழங்கினர். (21)

# கலந்துரையாடல்

(வடமராட்சி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களுக்குப் பருத்தித்துறை இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளை அலுவலகத்தில் பேராசிரியர் திரு. கணேசலிங்கம் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கலந்துரையாடல் கூட்டம் நடைபெறவுள்ளது. (யோ)

# திறந்து வைக்கப்பட்டது

(கொழும்புத்துறை)

யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.10 மணியளவில் புடைவை விற்பனை நிலையம் ஒன்று மங்கள விளக்கேற்றி சமயாசாரமுறைப்படி யாழ்.அரசாங்க அதிபர் திரு கா.மாணிக்கவாசகர் திறந்து வைத்தார்.

செயலக ஊழியர்களும் பிரதேச உதவி அரசாங்க அதிபர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றிச் சிறப்பித்தனர். (24)

# புதிய ஆரம்ப பாடசாலை

புங்குடுதீவில் இருந்து இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கான புதிய ஆரம்ப வகுப்பு மாணவர்களை சேர்ப்பதற்கான பாடசாலை யாழ் இந்து மகளிர் கல்லூரிவீடுதியில் நடைபெற்று வருகின்றது. இப் பாடசாலையில் ஆண்டு 1க்குரிய மாணவர்களை சேர்க்குமாறு புங்குடுதீவு கோத்தணி அதிபர் திரு. கா.பேரம்பலம் தெரிவித்துள்ளார். (17)


- அந்தியேட்டிகக்குத் தேவையான 12'' x 1 '' Recopy புகைப்படங்கள்
- நினைவஞ்சலி, கல்வெட்டு, புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line Tone, Colour Blocks
- Photo Polymer (பிளாஸ்ரிக் Blocks)
- றபர் சீல
- ஓவிய வேலைகள்
- விளம்பர ஸ்ரிக்கேஸ்

தரமாக குறைந்த விலையில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள

**கொழும்பு ஸ்ருடியோ**

யாழ்ப்பாணம்.

(சி-5518)


# 90-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



| மண்ணிற் காய்: | | விண்ணிற் காய்: |
|---|---|---|
| 12 – 05 – 1977 | | 13 – 09 – 1992 |

**வீரவேங்கை ஒளியன் (கிரி)**
**(தெய்வேந்திரம் இராஜதேவன்)**

ஈழமிகு பெற்றெடுத்த எம்இனிய - வேங்கையே கிரி
காலம் என்ன செய்ததடா எம் கன்னிக் காளையே-ஒளி
ஈழம் இது பெற்றிடவே வந்துதிர்த்த - செல்வமே கிரி
ஈன்றவர் கதி சலங்க எங்குதான் சென்றாயோ கிரி
மண்தனை மீட்க மாட்சிமை கொண்ட - மறப்புலியே
கிரி உன்னை
மறக்கமாட்டார் தமிழரடா.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புலவர் வீதி. நவாலி வடக்கு,
மானிப்பாய்.

பெற்றோர் சகோதரர்கள்,
உறவினர்,
நவாலி வாழ் மக்கள்

(3776)

# சுருக்கெழுத்து பயிற்சி விண்ணப்பம் கோரல்

(பருத்தித்துறை)

பாடசாலையைவிட்டுவிலகிய இளைஞர் யுவதிகளின்நன்மை கருதிவடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் 6 மாதகால சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பொன்றை நடாத்தி உதவவுள்ளது இப்பயிற்சி வகுப்பு தைமாதம் 1ஆம் திகதி (1993 ஆரம்பிக்கப்படவுள்ளது

க. பொ. த (சா/த) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் ஆங்கிலம், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திபெய்தியவர்கள் 15-12-92 க்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமென வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகச் செயலாளர் திரு சி.வ. சிவச்சந்திரதேவன் அறிவித்துள்ளார். (25)

# ஆசிரியர், அதிபர் கௌரவிப்பு

(வடமராட்சி)

தப்பசெட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, மேலை புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்கள், ஆசிரியர்கள். அதிபர்களை சனசமூக நிலையம் கௌரவித்தது.

புலோலி மத்தி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் தலைவர் திரு. அ. துரைசிங்கம் தலைமையில் கடந்த வியாழன் இரவு 7 மணிக்கு மேற்குறித்த பாடசாலைகளில் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் அதிபர்கள் மற்றும் கணிதம் தமிழ் கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவித்தது. (யோ)

# மன்னார் ஆயர் குருத்துவ வெள்ளிவிழா

மன்னார் ஆயராக கடமையாற்றும் பேரருள்திரு. இராயப்பு ஞானாநந்தர் யோசவ் ஆண்டகை அவர்கள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட குருத்துவ வெள்ளிவிழா இன்று அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இவர் 1967 டிசம்பர் 13-ம் திகதி அன்று யாழ். புனித மரியன்னை ஆலயத்தில் ஆயர் எமிலியானுஷ்பிள்ளை அவர்களினால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# திருமுறை முற்றோதல்

(பருத்தித்துறை)

புலோலி பசுபதீஸ்வரர்(சிவன் கோவில்) ஆலயத்தில்திருமுறை முற்றும் ஓதல் பூர்த்தி விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது மாலை சாயரட்சை பூசை இடம் பெற்று தொடர்ந்து நாயன்மார் நால்வருக்கும் விசேட பூசைகள் நடைபெற்று நாயன்மார்கள் வீதி உலா வந்தார்கள். (25)

# கபடி சுற்றுப் போட்டி

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைக்காக வீரச்சாவைத் தழுவிக்கொண்ட பருத்தித்துறை கொட்டடி மாவீரர்களின் நினைவாக பருத்தித்துறை துள்ளுமீன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் கபடிச் சுற்றுப் போட்டி தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறுமெனதுள்ளுமீன் விளையாட்டுக் கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (25)

# நாவலர் குருபூசை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமையன்று யாழ். பல்கலைக்கழக வளவினுள் அமைந்திருக்கும் பரமேஸ்வரன் ஆலயத்தில் காலையில் விசேட பூஜை வழிபாடுகளும், பிற்பகலில் கைலாசபதி கலை அரங்கில் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றத்தினரும். பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபையினரும் இணைந்து இக்குருபூசைத் தின ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

# சர்வோதயம் கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சர்வோதய இளையினர் தமது சேவையை மேலும் பன்முகப்படுத்தும் நோக்குடன் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் தமது கிளைகளை அமைக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வகையில் கடந்த ஒன்பதாம் திகதி சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஏனைய பிரிவுகளிலும் விரைவில் கிளைகள் திறக்கப்பட இருப்பதாகக் கூறபடடுகிறது.


**மலிவு விற்பனை**
**[Clearing Sale]**

★ ஆண்டு-6 அநுமதிப் பரீட்சை
★ O/L
★ A/L விஞ்ஞானபாடங்கள்

50வீத சிறப்புக்கழிவு விலையில் மேற்படி வகுப்புக்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**BOND**

யாழ்ப்பாணம் (சி-5575)


# நினைவு கூருகின்றோம்...

**1992-12-13**

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் -முருங்கன் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மெதடிஸ்த திருச்சபைப் பாதிரியார், அவரது வாகனச் சாரதி உட்பட 3 தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு மன்னார் - பெரியமடுப் பகுதியில் தேசவிரோதிகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின்போது வீரச்சாவெய்திய -
2-ம் லெப். சிறி (ஆரோக்கியம் ஜோண்சில்வா - கோவ்வங்குளம், நானாட்டான் - மன்னார்.

மட்டு. கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் தேசத்துரோகிகளால் கொலை செய்யப்பட்ட -
விஜயன் (தம்பிராசா முத்துலிங்கம் - வினாயகபுரம், திருக்கோயில் - அம்பாறை)

1988 ஆம் ஆண்டு கிளாலிப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -
ஜோதிரவி (சண்முகம் வேல்ராஜ் - அல்லிப்பளை, பளை - கிளிநொச்சி)

அம்பாறை - பொத்துவில், களுவாங்கரைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
சந்திரன்

1991 ஆம் ஆண்டு மன்னார் - அரிப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில் சிக்கிப் பலியான 2 குழந்தைகளின் தந்தையான தமிழர்.

மட்டு காங்கேயன் ஓடைத் தடைமுகாம் பகுதியில் இராணுவத்தினரால் சுடடுக் கொல்லப்பட்ட தமிழர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5578]

## சிந்தனைக்கு

தான் மேய்க்கும் ஆடுகளின் நலனும், தன் சொந்த நலனும் ஒன்றுதான் என்று ஆடுகளை நம்பச் செய்யவே, மேய்ப்பவன் எப்பொழுதும் முனைவான்.

— ஸ்டெண்டால்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 13-12-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் - 05


## கனவு கலைந்தது

பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாகக் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் கொண்டிருந்த கனவு கலைந்துவிட்டது போல் தெரிகின்றது. இனப்பிரச்சினைத் தீர்விற்குத் தெரிவுக்குழுவினால், உருப்படியான எதையும் செய்ய முடியாது என்பதை அவை தற்பொழுது வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டிய ஓர் அவல நிலைக்கு வந்துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

நேற்று முன்தினமும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவென அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு தீர்வு எதையும் காணாது முடிவுற்றது. டிசம்பர் மாத இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் வைக்கும் என முன்னர் தெரிவிக்கப்பட்டு வந்தமை, தற்பொழுது நடைமுறைச் சாத்தியமற்றது என்பது பெரும்பாலும் உணர்த்தப்பட்டுள்ளது.

ஆனால், இது குறித்து நாம் பலதடவை இப்பகுதியிலேயே சுட்டிக் காட்டிவந்துள்ளோம். ஆனால், கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடும் என்ற கற்பனையில் இருந்தன. தற்பொழுது ''தமிழரைப் பொறுத்தவரை பாராளுமன்றத் தெரிவுக்குழு குலைந்து விட்டது'' எனத் தெரிவிக்கின்றன. ஆனால், உண்மையில் தமிழ்மக்கள் பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டு விடும் என தமிழ்க்குழுக்கள் போன்று சிறுபிள்ளைத் தனமாக நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இந்நிலையில்பாராளுமன்றத் தெரிவுக்குழு குலைந்துவிட்டது என்பது கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கானதே ஒழிய தமிழ்மக்களுக்கு அல்ல.

பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆரம்ப நடவடிக்கையைத் தொடங்கிய காலத்தில், விடுதலைப் புலிகள் சிங்கள இராணுவத்தால் ஒடுக்கப்படுவதற்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்கு - கிழக்கு இணைந்த ஓர் அரசியல் தீர்விற்கு வருவதற்கும் சரியாக இருக்கும் என்றே தமிழ்க்குழுக்கள் நம்பின. அத்தோடு, வடக்கு - கிழக்கின் ஆட்சியும் தமது கையில் கிட்டும் என கற்பனையும் செய்தனர்.

ஆனால், இவர்களின் கணக்குகள் தப்புக் கணக்காகியது. இதற்கு சிங்களப் பேரினவாத அரசாங்கமும் தமிழ்க் குழுக்களும், விடுதலைப் புலிகளின் ...

# ஜேர்மனியில் வெளிநாட்டவர் மீது 'புதிய நாசிகளின்' தாக்கு அதிகரிப்பு

## பத்து மாதத்தில் 1500 தாக்குதல்கள்

(பேர்லின்)

'புதிய நாசிகள்' என அழைக்கப்படும் தீவிர வலதுசாரிகளின் வெளிநாட்டவர் மீதான தாக்குதல்கள் அண்மைக் காலத்தில் அதிகரித்து வருவதாகவும், இவ்வருடம் ஒக்டோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் மட்டும் 1500க்கு மேற்பட்ட தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் 11 பேர் கொல்லப்பட்டதாகவும் ஜேர்மன் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜேர்மனியின் வடபகுதி நகரமான ரொஸ்ட்டொக்கில் அண்மையில் இடம்பெற்ற வெளிநாட்டவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜேர்மன் பத்திரிகையாளர்கள் இது வன்முறைகளுக்கான ஆரம்ப அறிகுறியே என்று கூறுகின்றனர்.

ஜேர்மனிக்குள் வன்முறைகளை அறிமுகம் செய்த நாசி இளைஞர்கள், வெளிநாட்டு அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களையே தேடிச்சென்று தாக்குதல் நடத்துகின்றனர். ரொஸ்ட்டொக்கில் அகதிகளுடைய விடுதி ஒன்று தங்கியிருந்தவர்களுடன் கிட்டத்தட்ட முற்றாக எரிக்கப்பட்டது பின்னர் வன்முறைகள் ஏனைய மாநிலங்களிற்கும் பரவத் தொடங்கியது.

சுமார் எட்டுக்கோடி மக்கள் தொகையைக் கொண்டுள்ள ஜேர்மனியில் சுமார் அறுபது லட்சம் வெளிநாட்டவர்கள் உள்ளனர். இவர்களில் அகதிகளாக தஞ்சம் கோரி இருப்போர் தான் பெருமளவானோர் ஆகும்.

தற்போது புதிய நாசிகள் எனக்கூறப்படும் வலதுசாரித் தீவிரவாதிகளில் சுமார் 4200 பேர்வரையில் ஜேர்மனியில் இருப்பதாக புலனாய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர் இவர்களில்பெரும்பாலானோர் 16-25 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பதுடன், சுமார் 3000 பேர் முன்னாள்கிழக்குஜேர்மனியின் மாநிலங்களிலேயே தீவிரமாக செயற்படுகின்றனர். இவர்களைவிட இதேபோன்ற கொள்கையுடைய சுமார் 76 அமைப்புக்களில் 40,000 உறுப்பினர்கள் வரையில் செயற்பட்டுவருவதாகவும் கூறப்படுகிறது.

ஜேர்மன் முழுவதிலும் பரவலாகச் செயற்படும் இவர்களுக்கு ஆயுதம் ஒரு பிரச்சினையாக இல்லை கற்கள், தடிகள், கத்திகள் மட்டுமன்றித் தமது கைகளையும் கூட ஆயுதங்களாகவே இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்நிலையில்தான் ஜேர்மனியில் தற்போது வாழும் வெளிநாட்டவர்கள் பலரும் எந்த நேரமும் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடும் என்ற அச்சத்துடனேயே வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

# கன்னியாகுமரியில் வெடிகுண்டு மீட்பு

(சென்னை)

கன்னியாகுமரி மாவட்டம் மணவாளக் குறிச்சி குஅருகே ஆறுதங்கள்விளை என்னுமிடத்தில் நூற்றி எண்பத்து ஐந்து வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டதாக தமிழக காவல் துறையினர் கூறியுள்ளனர் கடந்த வியாழன் இப்பகுதியில் மூன்று வெடிகுண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து பொலிசார் விசாரணை செய்ததாகவும் அதில் இவை கைப்பற்றப்பட்டதாகவும் முத்து கிருஷ்ணன் என்பவரை இது தொடர்பாக பொலிசார் கைது செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

## முத்தரப்பு பேச்சு

(டாக்கா)

பங்களாதேசில் தங்கியிருக்கும் ஜனாதிபதி பிரேமதாசா பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதமர்களுடன் முத்தரப்பு பேச்சு வார்த்தைகளை நடாத்தவுள்ளார்.

# தமிழ்நாடு அரசியல்வாதிகள் வீடுகள் மீது தாக்குதல்

தமிழக ஜனதா தளத்தின் முன்னாள் தலைவர் கே. ஆர். ராஜ்குமார் நேற்று முன்தினம் சென்னையில் நான்கு விஷமிகளால்தாக்கப்பட்டார். புகைப்படம்பிடிப்பு நிலையம்ஒன்றை விஷமிகள் தாக்கப்போன சமயம் தடுத்ததால் இவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

முன்னாள் மாநில அமைச்சர் கே. ராஜாராம், தமிழ்நாடு சட்ட சபையின் முன்னாள் சபாநாயகர் பி. எஸ் பாண்டியன் ஆகியோர் வீடுகளும் தாக்கப்பட்டன. இதற்கு அரசியல் பின்னணியே காரணம் என்று தமிழக நல்லாட்சி இயக்கம் என்ற அமைப்பைச் சேர்ந்த பி. எஸ். பாண்டியன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இது சம்பந்தமாகக் குடியரசுத் தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியவர்களுக்கும் தந்திகள் அனுப்பியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆயுத விற்பனை நிற்காவிடில் அபிவிருத்தி பயன் தராது

## - ஐ. நா. செயலாளர் கருத்து

(அட்லாண்டா)

மூன்றாம் உலக நாடுகளுக்கான ஆயுத விற்பனையை அபிவிருத்தியடைந்த நாடுகள் நிறுத்திக் கொள்ளாத வரை மூன்றாம் உலக நாடுகளில் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளால் பயன்எதுவும் ஏற்படப்போவதில்லை.

இரண்டு நாட்கள் நடைபெற்றஅபிவிருத்திக் கூட்டுறவு மாநாட்டில் கலந்துகொண்ட சர்வதேச பிரதிநிதிகள் கூட்டாக இவ் அறிவிப்பை விடுத்துள்ளனர்.

மூன்றாம் உலகநாடுகள் தமக்கு கிடைக்கும் உதவிப் பணத்தில் 10 சதவீதத்திலும் குறைவான பணத்தையே கல்வி' சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு ஆகிய துறைகளுக்குச் செலவிடுகின்றன.

மிகுதிப்பணம் ஆயுதங்களுக்காகச் செலவிடப்படுகிறது என்று ஐ நா சபையின் பொதுச் செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ் காலி தெரிவித்தார்.

ஆயுதக் குறைப்பு காரணமாக இழக்கப்பட்ட ஆயுத விற்பனையை ஈடு செய்யும் வகையில் மூன்றாம் உலகநாடுகளுக்கு ஆயுதங்களை விற்க ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் கடுமையாக முயற்சி செய்யக் கூடும் என்றும் ஆயுத விற்பனை கட்டுப்படுத்தப்பட வேண்டும் அல்லது ஆயுதங்களை இலவசமாக வழங்க வேண்டும் என்றும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டர் தெரிவித்தார்.

# ஜனவரி 13, 14ஆம் திகதி டாக்காவில் சார்க் மாநாடு

(டாக்கா)

ஒத்திவைக்கப்பட்ட தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு சங்கத்தின் மாநாடு அடுத்த மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் மீண்டும் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வியாழன் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் கூடிய சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இதற்கானதீர்மானமொன்றை மேற்கொண்டனர். முன்பு செயலாளர்கள் மட்டத்தில் ஆராயப்பட்ட பொது அலுவல் பட்டியலை வெளியுறவு அமைச்சர்கள் பரிசீலித்தனர் எனவும் பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# காரைக்குடியில் குண்டுவெடிப்பு

காரைக்குடிக்குஅருகே விளகோட்டையூர் ரயில் நிலையத்தில் இருந்து இருநூறு மீற்றர் தூரத்தில் வியாழக்கிழமை இரவு இரண்டு குண்டுகள் வெடித்தன. இதனால் ரயில் பாதை சேதமுற்றது.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சமீபமாகத் தமிழர் விடுதலைப்படை என்னும் பெயரிலான துண்டுப்பிரசுரங்கள் பல காணப்பட்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர். இதன்விளைவாகச் சென்னைக்குச்செல்லும்ரயில்களும் இராமேஸ்வரம், திருவாரூர் ரயில்களும் வழித்தடங்கள் காரணமாக உடனடியாக மாற்றப்பட்டன. எனினும் நேற்றுக் முன்தினம் சேதமான ரயில் பாதை திருத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### விமானவிபத்தில் சிக்கி

# இராணுவத் தளபதியும் 8 அதிகாரிகளும் மரணம்

ஈக்குவடோரில் இராணுவத் தளபதியும், எட்டு முக்கிய இராணுவ அதிகாரிகளும் பயணம் செய்த ஜெட் விமானம் ஒன்று பத்து மாடிக் கட்டடம் ஒன்றுடன் மோதி விபத்து ஏற்பட்டதால் கொல்லப்பட்டுள்ளனர். இக்கட்டடத்தில் இருந்த ஊழியர் ஒருவரும் பலியானார். பறந்து கொண்டிருந்த ஜெட் விமானத்தின் இறக்கையொன்று பத்துமாடி கட்டடத்தில் உரசியதால் இவ்விபத்து நேரிட்டது

# அயோத்தி சம்பவங்களுக்கு கல்யாண்சிங் அரசுதான் பொறுப்பு

# அயோத்தி விவகாரத்தால் சார்க்கிற்கு அச்சுறுத்தல்

## - சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா

[illegible] விக்கின்றன. ஆனால், உண்மையில் தமிழ்மக்கள் பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டு விடும் என தமிழ்க்குழுக்கள் போன்று சிறுபிள்ளைத் தனமாக நம்பிக்கை கொண்டிருக்க வில்லை. இந்நிலையில்பாராளுமன்றத் தெரிவுக்குழு குலைந்துவிட்டது என்பது கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கானதே ஒழிய தமிழ்மக்களுக்கு அல்ல.

பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆரம்ப நடவடிக்கையைத் தொடங்கிய காலத்தில், விடுதலைப் புலிகள் சிங்கள இராணுவத்தால் ஒடுக்கப்படுவதற்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்கு - கிழக்கு இணைந்த ஓர் அரசியல் தீர்விற்கு வருவதற்கும் சரியாக இருக்கும் என்றே தமிழ்க்குழுக்கள் நம்பின. அத்தோடு. வடக்கு - கிழக்கின் ஆட்சியும் தமது கையில் கிட்டும் என கற்பனையும் செய்தனர்.

ஆனால், இவர்களின் கணக்குகள் தப்புக் கணக்காகியது. இதற்கு சிங்களப் பேரினவாத அரசாங்கமும் தமிழ்க் குழுக்களும், விடுதலைப் புலிகளின் பலம்குறித்து கொண்டிருந்த தவறான கணிப்பீடே காரணமாகும். இந்நிலையில், அரசாங்கமும், தமிழ்க்குழுக்களும் எதிர்பார்த்த மாதிரி, விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாமல் போனதும், தமிழ்க்குழுக்கள் எதிர்பார்த்தது போன்று வடக்கு-கிழக்கு இணைந்த ஓர் சமஷ்டி அமைப்பு அரசாங்கம் முன்வைக்காமல் போனதும் அவர்களுக்குப் பலத்த ஏமாற்றமாக அமைந்தது.

அதேவேளை அண்மைக்காலத்தில் சிறிலங்காவிடம் முன்வைத்த தனித்தனி மாகாணங்களுக்கான சமஷ்டி அமைப்பு முறையை இக் குழுக்கள் எதிர்த்காலும் ''சமஷ்டி அமைப்பு'' என்ற ரீதியில் அவை ஓரளவு திருப்தியே கொண்டும் இருந்தன. கொழும்பிலுள்ள சகல தமிழ்க்குழுக்களும் சமஷ்டி ஆட்சியைஆதரித்து அறிக்கைகளை வெளியிட்டும் இருந்தனர். இதேவேளை சமஷ்டி அமைப்புப் பற்றி அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியும் சிறிது பேசத் தொடங்கியபோது இக்கட்சிகள் ஓரளவு நம்பிக்கை கொண்டன. இச்சமஷ்டி அமைப்பை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தை வற்புறுத்துவதன் மூலம் வடக்குக்கிழக்கு இணைந்த ஒரு திட்டத்திற்கு சிங்களபேரினவாத கட்சிகளைக் கொண்டுவரலாம் எனவும் அவை எண்ணின.

இவ் எண்ணத்துடனேயே நேற்றுமுன்தினமும் பாராளுமன்றத்தெரிவுக் குழுவின் கூட்டத்திற்குச் சென்றவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியினதும் சுதந்திரக்கட்சியினதும் நிலைப்பாடும் பெரும் ஏமாற்றமாக இருந்தது. சமஷ்டி அமைப்புமுறையை சிங்கள பேரினவாதக் கட்சிகள் நிராகரிப்பதோடு வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வைப்பற்றிப் பேசாமல் இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கான நிர்வாகப் பரவலாக்கல் பற்றிப் பேசியுள்ளார்கள். இன்றுள்ள அரசியலமைப்பிலோ அன்றி. நிர்வாக அமைப்பிலோ மாற்றங்கள் ஏற்படுவதை அவை நிராகரித்துவிட்டன.

இந்நிலையில்தான் தற்பொழுது தமிழ்க்குழுக்கள் தெரிவுக்குழுவில் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்கள். அதிகார ஆசையினால், வரலாற்றுப் பாடத்தை கற்க மறுத்த இவர்கள் இன்று தமது ஏமாற்றத்தை தமிழ் மக்களின் ஏமாற்றமாக மாற்ற முற்பட்டுள்ளார்கள். ஆனால், தமிழ்மக்கள் இவர்கள் போல் இனத்துரோகிகளுமல்ல, ஏமாளிகளுமல்ல.

## ஜனவரி 13, 14ஆம் திகதி டாக்காவில் சார்க் மாநாடு

(டாக்கா)

ஒத்திவைக்கப்பட்ட தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு சங்கத்தின் மாநாடு அடுத்த மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் மீண்டும் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வியாழன் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் கூடிய சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இதற்கானதீர்மானமொன்றை மேற்கொண்டனர். முன்பு செயலாளர்கள் மட்டத்தில் ஆராயப்பட்ட பொது அலுவல் பட்டியலை வெளியுறவு அமைச்சர்கள் பரிசீலித்தனர் எனவும் பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

[illegible] மாக இழக்கப்பட்ட ஆயுத விற்பனையை ஈடு செய்யும் வகையில் மூன்றாம் உலகநாடுகளுக்கு ஆயுதங்களை விற்க ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் கடுமையாக முயற்சி செய்யக் கூடும் என்றும் ஆயுத விற்பனை கட்டுப்படுத்தப்பட வேண்டும் அல்லது ஆயுதங்களை இலவசமாக வழங்க வேண்டும் என்றும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டர் தெரிவித்தார்.

விமானவிபத்தில் சிக்கி

## இராணுவத் தளபதியும் 8 அதிகாரிகளும் மரணம்

ஈக்குவடோரில் இராணுவத் தளபதியும், எட்டு முக்கிய இராணுவ அதிகாரிகளும் பயணம் செய்த ஜெட் விமானம் ஒன்று பத்து மாடிக் கட்டடம் ஒன்றுடன் மோதி விபத்து ஏற்பட்டதால் கொல்லப்பட்டுள்ளனர். இக்கட்டடத்தில் இருந்த ஊழியர் ஒருவரும் பலியானார். பறந்து கொண்டிருந்த ஜெட் விமானத்தின் இறக்கையொன்று பத்துமாடி கட்டடத்தில் உரசியதால் இவ் விபத்து நேரிட்டது

## அயோத்தி சம்பவங்களுக்கு கல்யாண்சிங் அரசுதான் பொறுப்பு

### - இந்தியப்பிரதமர் தெரிவிப்பு

(டில்லி)

அயோத்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவத்திற்கு பதவி நீக்கப்பட்ட கல்யாண் சிங் அரசு தான் முழுப் பொறுப்புஏற்க வேண்டும் என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

புதுடில்லியிலுள்ள தமது இல்லத்தில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில் நன்கு பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே ஐந்து அமைப்புகளையும் தடைசெய்யும் முடிவு எடுக்கப்பட்டதாகவும், மாநிலங்களில் எந்தக் கட்சி அதிகாரத்தில் இருந்தாலும் நாடு முழுவதிலும் இந்தத் தடை அமுல்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

## ராவ் அரசு கவிழும் பாரதிய ஜனதா ஆருடம்

(டில்லி)

நரசிம்மராவ் அரசு கவிழும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் பேச்சாளர் கே. ஆர். மல்கானி கூறினார்.

விஸ்வ ஹிந்து பரிஷத், ராஷ்டிர கிராம சேவா சிங் ஆகியன தடை செய்யப்பட்டிருப்பதாலேயே நரசிம்மராவ் அரசு கவிழும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நரசிம்மராவ் அரசின் இந்த நடவடிக்கையைத் தாம் சட்ட ரீதியாக எதிர்ப்போம் என்று ராஷ்டிர கிராம சேவா சிங் பொதுச் செயலாளர் ராகேந்திர சிங் கூறியிருக்கிறார்.

## அயோத்தி விவகாரத்தால் சார்க்கிற்கு அச்சுறுத்தல்

### - சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா

(டாக்கா)

இந்தியாவின் அயோத்தியாவில் பாபர் மசூதி தகர்க்கப்பட்டதும், அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களும், சார்க் அமைப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று இவ் அமைப்பின் இப்போதைய தலைவரும் சிறிலங்கா ஜனாதிபதியுமான பிரேமதாசா கூறியுள்ளார்.

தற்போது பங்களாதேசத்தின் தலைநகர் டாக்கா சென்றிருக்கும் அவர் அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும்,

அயோத்தியாவில் நிகழ்ந்த சம்பவங்களால் தெற்காசிய நாடுகள் ஒத்துழைப்பு அமைப்பின் நடவடிக்கைகள் பாதிக்கப்படக்கூடாது எனவும் உச்சி மாநாடு ஒத்திப் போடப்பட்டமையால் எந்தப் பின்னடைவும் நேராது எனவும் குறிப்பிட்டார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பின் போது அயோத்தி விவகாரம் தொடர்பாகசார்க் அமைப்பு எவ்வாறு நடந்து கொள்ளும் என்று ராய்ட்டர் நிருபர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பிரேமதாசா எந்தவொரு நாட்டினதும் உள்விவகாரங்களில் சார்க் அமைப்பு தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக்கூடாது எனத் தெரிவித்தார்,

## நான் எப்போதும் ஆர். எஸ். எஸ். தொண்டன்

### - ராஜஸ்தான் முதல்வர் அறிவிப்பு

நான் ராஷ்டிரிய கிராம சேவா சங்கத்தின் தொண்டனாகவே இருக்கிறேன். நான் எனது பதவியைத் துறக்க மாட்டேன் என்று ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் பங்கிராான் சிங் திகாய்த் கூறியுள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சியை சேர்ந்தவரான முதலமைச்சர் திகாய்த் மேலும் கூறுகையில்; மத்திய அரசு விரும்பினால் தனது ஆட்சியைக் கலைக்கட்டும் என்று மத்திய அரசுக்கு சவால் விடுத்தார்.

ராஜஸ்தானில் பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சி புரிகிறது என்பதும், மத்திய அரசு ராஷ்டிரிய கிராம சேவா சங்கமான ஆர். எஸ். எஸ். அமைப்புக்குக் தடை விதித்திருப்பதும் தெரிந்ததே.

## பாகிஸ்தானில் சேதமான இந்துக்கோவில் கட்டப்படும்

அயோத்தியில் பாபர் மசூதி வளாகம் தகர்க்கப்பட்டதன் எதிரொலியாக பாகிஸ்தானில் சேதமாக்கப்பட்ட இந்துக் கோவில்கள் அனைத்தும் மீண்டும் புனரமைப்புச் செய்யப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் கூறியுள்ளார்.

### பிரதமர் நவாப்ஷெரீப்

இதேவேளை அயோத்தி சம்பவங்களையடுத்து ரத்துச் செய்யப்பட்டிருந்த பாகிஸ்தான் — இந்தியா ரயில் போக்குவரத்து நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் கலவரம் தொடர்கிறது 4பலி;2,000க்கு அதிகமானோர்கைது

(டில்லி)

பாபர் மசூதி சேதமாக்கப்பட்டதையடுத்து தோன்றிய பதற்றம் தணியத் தொடங்கியிருப்பதாக கூறப்படும்வேளையிலும் ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக கூறப்படுகிறது.

டில்லி கிழக்குப் பகுதியில் வன்முறைக் கும்பலொன்று மூன்று வீடுகளுக்கு தீ மூட்டியதாகவும், கல்லெறி இடம்பெற்றதாகவும் ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன. இச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், நான்கு பேர் காயமடைந்தனர். பொலிசார் முந்நூறுக்கு மேற்பட்டோரைக் கைது செய்தனர்

மத்தியப் பிரதேசத்திலும் போபால் நகரம் உட்பட பல்வேறு பகுதிகளிலும் பதற்றம் நிலவுவதாகவும் பொலிசார் நடத்திய சோதனைகளில் 1800 பேர் கைதுசெய்யப்பட்டதுடன், 500 ஆயுதங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. இப்பகுதியில் வன்முறையால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப் பார்வையிட்டமத்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியா இராணுவத்தை அழைக்கும்படி மாநில அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளார்

குஜராத் மாநிலத்தில் அகமதாபாத நகரில் நடைபெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததாகவும், ஆனந்த் நகரில் பொலிசாரின் துப்பாக்கிப்பிரயோகத்தில்இருவர் கொல்லப்பட்டதாகவும், கூறப்படுகிறது.

கர்நாடக மாநிலத்தில்பத்து பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமுல்படுத்தப்படுவதுடன், செவ்வாய்க்கிழமை வரை பாடசாலைகள், கல்லூரிகள் யாவும் மூடப்பட்டுள்ளன. வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ மத்திய அரசு பதினொருலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை முதலமைச்சருக்கு அளித்துள்ளது.

ஒரிஸாமாநிலத்தின்கட்டாக் நகரிலும் 70 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் உத்தரப் பிரதேசத்தின் கான்பூர், வாரணாசி உட்பட பல நகரங்களிலும் பதற்றம் தொடர்ந்து நிலவுகின்றது.

ஈழநாதம்

# ரஷ்ய ஜனாதிபதி முயற்சிக்கு பாராளுமன்றம் தடை

(மொஸ்கோ)

ரஷ்சிய பாராளுமன்றத்தை கலைப்பதற்கென ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் நேற்று முன்தினம் மேற்கொண்ட நடவடிக்கைகளை தடுப்பதற்கு ரஷ்சிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாராளுமன்றத்தை கலைப்பதற்கு சர்வசன வாக்கெடுப்பை நடாத்துவதற்கான முயற்சியில் பொரிஸ் யெல்சின் ஈடுபட்டிருந்தார்.

பாராளுமன்றத்தை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடிய எந்த ஒரு செயலையும் தடுப்பதற்கு வழிசெய்வதற்காக அபிப்பிராய வாக்கெடுப்பு சட்டத்திற்கு கொன்சவேட்டிவ்வுகளான காங்கிரஸ் அங்கத்தவர்கள் திருத்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இத்திருத்தம் முதற் கட்ட வாக்கெடுப்பில் நிராகரிக்கப்பட்ட போதிலும் பிரதிநிதிகள் சட்டம் சம்பந்தமாக ஆட்சேபனை எழுப்பியதைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட வாக்கெடுப்பில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது பாராளுமன்ற சபாநாயகர் இத்திருத்தத்தை பெரிதும் ஆதரித்தார் யெல்சினுக்கு எதிரான நடவடிக்கையில் இவர் முக்கிய பங்குவகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொரிஸ் யெல்சினின் தீவிர பொருளாதாரமனு சீரமைப்பு திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடவகை செய்யும் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என யெல்சின் முன்னர் கேட்டிருந்தமை தெரிந்ததே.

## பாகிஸ்தான் பிரதமர் பங்களாதேஷ் விஜயம்

(டாக்கா)

பாகிஸ்தான்பிரதமர் நவாஸ் சரீப் ஒரு நாள் பிரயாணமாக நேற்று பங்களாதேஷ் வந்துள்ளார்.

பங்களாதேஷ்பிரதமர்பேகம் காலிதாஷியா அளிக்கும் விருந்தில் கலந்து கொண்ட அவர், ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுடனும் பேச்சுவார்த்தை நடததினார்.

பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் சிறிலங்காத் தலைவர்கள் டாக்காவில் சந்திப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது

பங்களாதேஷிற்கு சகல உதவிகளையும் வழங்க உறுதியளித்தார். இரண்டு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான உறவுகள் நிலவுவதன் காரணமாகத் தான் பங்களாதேஷ் நாட்டுக்கு விஜயம் செய்ததாகத் ஜனாதிபதிபிரேமதாசா தெரிவித்தார்.

# பாபர் மசூதி மீண்டும் கட்டப்படும்

## - சரத்பவார்

(டில்லி)

அயோத்தியில் தகர்க்கப்பட்ட பாபர் மசூதி மீண்டும் கட்டப்படவுள்ளது என பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தெரிவித்திருக்கிறார்.

முக்கிய பிரமுகர்களைக் கலந்தாலோசித்து மசூதி மீண்டும் கட்டப்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.

பாபர் மசூதி மீண்டும் கட்டப்படும் என இந்தியப் பிரதமர் நரசிம்பராவ் முன்னர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்து தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்ட பாபர் மசூதி மீண்டும் கட்டப்பட வேண்டும் என பாகிஸ்தான் இந்திய அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளது.


## வெற்றிடங்கள்

யாழ். நகரில் உள்ள ஒரு முன்னணி நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. தட்டெழுத்தாளர் ஆங்கிலம் / தமிழ் (பெண்கள் மட்டும்)
2. போட்டோ பிரதி இயந்திர இயக்குனர்
3. காவலாளி (இரவு), (பகல்)


### மாணவர் உணவுமுத்திரை பொருள்கள்

(குருநகர்)

மாணவர்களின் மதிய உணவு (ஜூன், ஜூலை, செப்டம்பர் மாத) முத்திரைகளுக்கு யாழ்-பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் நேற்றுத் தொடக்கம் உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அரிசி, சீனி, கடலை, குரக்கன்மா போன்ற பொருள்கள் முத்திரைகளின் பெறுமதிக்கு ஏற்ற அளவில் விநியோகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

### உதைபந்தாட்டம்

இன்று பிற் பகல் 3 30 மணியளவில் யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் யாழ். உதைபந்தாட்ட தெரிவுக் குழுவை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட தெரிவுக்குழு மோத உள்ளது. (17)

# தென்பகுதி தலைவர்களை கொலைசெய்ய கிளர்ச்சிக்குழு

## லண்டன் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

சிறிலங்காவின் முக்கிய இரு கட்சிகளினதும் முக்கிய அரசியல் தலைவர்களை கொலை செய்வதை நோக்காகக் கொண்டு தென்னிலங்கையில் புதியதோர் கிளர்ச்சிக் குழு உருவாகி வருவதாக தெரிய வருகிறது.மேற்படி திடுக்கிடும் தகவல்களை பிரிட்டனிலிருந்து வெளிவரும் ''சில்வர்ரூல்'' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா எதிர்க் கட்சி ஆகியவற்றின் முக்கியஸ்தர்களை கொலை செய்வதுடன் நாட்டில் கிளர்ச்சியை உருவாக்கி படுகொலைகளைப் புரிவதே இக்குழுவின் நோக்கம் எனவும் அப்பத்திரிகை மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னர் நாட்டில் கிளர்ச்சியை உருவாக்கிய இளைஞர்களுக்கு எதிராக அவர்களின் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போட்டு இராணுவத்திற்கு உதவி புரிவதே இக் கிளர்ச்சிக் குழுவின் மற்றொருநோக்கமாகும் இந் நடவடிக்கைகளின் மூலம் ஜே. வி. பி.யை மீண்டும் கிளர்ச்சியில் ஈடுபடாது தடுப்பதே இதன் நோக்கமாகும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இக் கிளர்ச்சிக் குழு தென்னிலங்கையில் தாம் முன்னணியில் திகழ முடியும் என கருதுவதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

# வடமராட்சி கரையில் மூங்கில் படகு வீடு

(வடமராட்சி)

மீனவர்கள் கடலில் கடற்றொழிலுக்குப் பயன்படுத்தும் மூங்கில் வீடு ஒன்று சுற்கோட்டை கடற்கரையை வந்தடைந்துள்ளது.

நேற்று அதிகாலை 3 30 மணியளவில் கரையை வந்தடைந்த மூங்கில் வீடு சுமார் 50 அடி நீளம், 15 அடிஉயரம், 15 அடி அகலத்தைக் கொண்டது.

மூங்கில் மரங்களாலும் ஓலைகளாலும் அழகாக அமைக்கப்பட்டஇந்த வீட்டில் படுத்து உறங்குவதற்கும், சமைப்பதற்கும், மீனை கருவாடாகப் பதப்படுத்துவதற்கும் வசதியாக அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தென் கிழக்கு ஆசிய நாட்டு மீனவர்களதென கருதப்படும் இந்த மூங்கில் வீடு கடலில் நீண்ட காலத்திற்கு தொழிலுக்குப் பயன் படுத்தக் கூடியவை என மீனவ வட்டாரங்கள் தெரிவித்தன. (17)

## அமைதி படைகுடும்பத்திற்கு வங்கிகளில் முன்னுரிமை

[கொழும்பு]

சிறிலங்காவில இறந்த இந்திய இராணுவத்தினரில் தங்கியுள்ளவர்களுக்கு இந்திய அரச வங்கிகளில் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

போரில் இறந்த இராணுவ வீரர்களின் குடும்பத்தினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள நாலரை வீதம் இடங்களில் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. இந்த நியமனங்களை வங்கிகள் நேரடியாக மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## 8 பொதுமக்கள் படையினரால் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலின்போது 8 அப்பாவி பொதுமக்கள் கைது செய்யப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் விசாரணைக்கென இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிராம

தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய எதுவித நடவடிக்கையும் இவர்கள் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந் நட்சாட்சி சான்றிதழ் படிவங்கள் யாழ்.

நொச்சிமோட்டையில்

ளுக்கு இராணுவம் தீவைத்துக் கொளுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைக்கு அஞ்சிய மக்கள் பெருந்தொகையான பணத்தையும் பொருள்களையும் கைவிட்டு ஓடி வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

உ தவி

பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.வழமை போல் பல்கலைக் சமூகத்துக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக உதவி நிதியாளர் திரு எஸ். காந்தமூர்த்தி கடந்த ஒரு மாதமாக கொழும்பில் தங்கியிருந்தார்.

இவர் கொள்வனவு செய்த

ஆறு

பொலிஸ் நிலைய வீதி, சளுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு), வீரவேங்கை கலைவாணி (செல்வராஜா மதிவதனி மீசாலைதெற்கு,சாவகச்சேரி), வீரவேங்கை மரியான் (விநாயகமூர்த்தி வரலட்சுமி வடலியடைப்பு, அரசடி வீதி, பண்டத்தரிப்பு) ஆகிய போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

இராணுவக

ளால் கைப்பற்றப்பட்டன.

- ★ ஆர். பி. ஜி. — 01
- ★ நடுத்தர ரவைகள் — 372
- ★ ஜே ஆர்.கைக்குண்டு — 02
- ★ ஏ. கே. மகசீன் — 02
- ★ ஏ. கே. கோல்சர் — 01
- ★ புகைக் குண்டு — 01
- ★ கிட்பாக் — 03
- ★ ரெயின்கோட் — 02
- ★ தலைக்கவசம் — 01
- ★ சிவில் தொப்பி — 01

கொழும்பு

லப்பிட்டியில் 143 பேரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் தமிழ் தலையாட்டிகள் முன் நிறுத்

யுத்த

இருக்க வேண்டும். போர் நிறுத்தம் நிலையானதாக இருந்தால்தான் பேச்சுக்களும் பயனுள்ளதாக அமையும். திம்புவிலிருந்து கொழும்புவரை நிகழ்ந்த பேச்சுக்களை இராணுவ தரப்பு போர் நிறுத்த மீறல்களால் முறித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஒரு நிலையான போர் நிறுத்தத்தை செய்து கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க பிரேமதாசா அரசு விரும்பவில்லை. போர் நிறுத்த கால இடைவெளியைப் பயன்படுத்தி புலிகள் இயக்கம் தனது இராணுவ அமைப்பை மேலும் பலப்படுத்திக்கொள்வலாம் என அரசு அஞ்சுகிறது. அடுத்ததாக புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் மேலாதிக்கம் பெற்றிருக்கும் இந்த சூழ்நிலையில் போர்நிறுத்தம செய்து புலிகளுடன் பேசுவதால் சிங்கள ஆயுதப்படைகளின் மனவுறுதி மேலும் தளர்வடையலாம் எனவும் அரசாங்கம் எண்ணுகிறது. அத்துடன் புலிகளின் கை ஓங்கிய நிலையில் பேசுவதானால் புலிகள் மீது எவ்வித அழுத்தத்தையும் பிரயோகிக்க முடியாது எனவும் அரசு சிந்திக்கிறது. எனவே, போரை தொடர்ந்து நடத்தி இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டவேண்டும் என்பதில் அரசாங்கம் தீவிர அக்கறையாக உள்ளது.

இராணுவத்தை நவீனமயப்

## சலுகைக்கட்டணத்தில் பஸ் சேவை

மாணவர்களின் போக்குவரத்து வசதி கருதி மூளாய் யாழ்ப்பாணம் மினிபஸ் சங்கம் விசேட சலுகைக் கட்டணத் திட்டம் ஒன்றை அறிமுகப் படுத்தியிருக்கிறது.

இத்திட்டத்தின்படிமேற்படி மினிபஸ் பாதையின் ஊடாகப் பயணம் செய்யும் மாணவர்கள் இச் சங்கத்தின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் மினிபஸ்களில் சலுகைக் கட்டணத்தில் தமது பயணத்தை மேற்கொள்ளலாம்என்றும் வழமையாகஅற விடப்படும் கட்டணத்தின் அரைவாசித் தொகையை மட்டும் செலுத்தினால் போதுமானது

தலைமைப்பீடம் கருதுகிறது. அதனால் தான் ஒருபுறம் போரை தொடர்ந்து நடத்திக் கொண்டு புலிகள் மீதும், பொதுமக்கள் மீதும் தொடர்ந்து நெருக்குதலை திணித்துக்கொண்டு, மறுபுறம் பேச்சுக்களை நடத்த அரசு விரும்புகிறது.

இந்தஅணுகுமுறையின்அடிப்படையில் புலிகளுடன் இரகசியப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நோக்கில் குவேக்கர்ஸ் சமாதானக் குழுமூலம் புலிகளுக்கு சில யோசனைகளை சமர்ப்பித்திருக்கிறது ஆனால், போரையும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்தும் இந்த யோசனைகள் தமிழரின் நலன்களுக்கு பாதகமாக அமையும் என்பதால் இதனை விடுதலைப் புலிகள் நிராகரித்

காப்பு அமைச்சர் சரத்பவார் தெரிவித்திருக்கிறார்.

முக்கிய பிரமுகர்களைக் கலந்தாலோசித்து மசூதி மீண்டும் கட்டப்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.

பாபர் பசூதி மீண்டும் கட்டப்படும் என இந்தியப் பிரதமர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்து தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்ட பாபர் பசூதி மீண்டும் கட்டப்பட வேண்டும் என பாகிஸ்தான் இந்திய அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளது.


## வெற்றிடங்கள்

யாழ். நகரில் உள்ள ஒரு முன்னணி நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. தட்டெழுத்தாளர் ஆங்கிலம் / தமிழ் (பெண்கள் மட்டும்)
2. போட்டோ பிரதி இயந்திர இயக்குனர்
3. காவலாளி (இரவு), (பகல்)
4. சணக்காளர்
5. லிகிதர்
6. மொழி பெயர்ப்பாளர்
7. மருத்துவ ஆய்வுகூட உதவியாளர்கள்
8. களஞ்சிய காப்பாளர்
9. சிற்றூழியர்

மேற்கூறிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் செவ்வாய் 15-12-92 முற்பகல் 9 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையில் பின்வரும் முகவரியில் நேரில் சமுகமளிக்கவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

**வில்லியம் ஹாவே**
**ஞாபகார்த்த மருத்துவமனை**
**17, கண்டி றோட், சுண்டுக்குழி,**
[சி-5584] யாழ்ப்பாணம்.


மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலின்போது 8 அப்பாவி பொது மக்கள் கைது செய்யப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் விசாரணைக்கென இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கிராம

தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய எதுவித நடவடிக்கையும் இவர்கள் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந் நட்சாட்சி சான்றிதழ் படிவங்கள் யாழ். நகரில் உள்ள தனியார் வியாபார நிலையங்களில் ரூபா 5/-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (17)

### அகதி

கரித்துவரும் இறப்புவிகிதம் அதிலும் குழந்தைகள் தாய்மார் இறப்புவிகிதம், தொற்று நோய்கள் தொடர்பாக ஆராயபட்டது.

மேலும் இது சம்மந்தமாக யாழ் மாவட்ட வைத்திய சுகாதார நிலையங்களைக் கொண்ட பூரண அறிக்கை ஒன்றை தயாரித்து தருவதாக யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார். இவ்வறிக்கை தயாரித்து முடிந்ததும் யாழ். அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது. யாழ் அரச அதிபர் இவ் அறிக்கையின் பிரதிகளை அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் கொழும்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திடமும் சமர்ப்பித்து மேற்படிப்பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

நொச்சிமோட்டையில் ளுக்கு இராணுவம் தீவைத்துக் கொளுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைக்கு அஞ்சிய மக்கள் பெருந்தொகையான பணத்தையும் பொருள்களையும் கைவிட்டு ஓடி வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (நி)

### உதவி

பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வழமை போல் பல்கலைக் கழகத்துக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக உதவி நிதியாளர் திரு எஸ். சாந்தமூர்த்தி கடந்த ஒரு மாதமாக கொழும்பில் தங்கியிருந்தார்.

இவர் கொள்வனவு செய்த பொருள்களை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கான அனுமதியை கூட்டுப்படைத் தலைமையகத்திடம் பெறுவதற்காக கடந்த இரண்டாம் திகதி சென்றுள்ளார் அங்கு இவரது பொருள்களின் பட்டியல்களை பார்வையிட்ட கூட்டுப்படைத் தலைமையகம் அவற்றுக்கான அனுமதியை வழங்க முடியும் எனவும் நாலாம் திகதி வந்து அனுமதியை பெற்று செல்லுமாறும் பணித்திருந்தது.

பின்னர் கடந்த 3 ஆம் திகதி நண்பகல் 2 00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் இடையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கைது செய்யப்பட்ட செய்தியை அறிந்ததும் கொழும்பில் தங்கி நின்ற யாழ். பல்கலைக்கழக பதிவாளர் பொரளை பொலிஸ் நிலயப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்ட போது கூட்டுப்படைத் தலைமையகத்தின் அவசர உத்தரவின் பேரிலேயே தாம் அவரைக் கைது செய்துள்ளதாக அவ் அதிகாரி பதிலளித்துள்ளார்.

டத்தரிப்பு) ஆகிய போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

### இராணுவக்

வால் கைப்பற்றப்பட்டன.

- ★ ஆர். பி. ஜி. — 01
- ★ நடுத்தர ரவைகள் — 372
- ★ ஜே ஆர். கைக்குண்டு — 02
- ★ ஏ. கே. மகசீன் — 02
- ★ ஏ. கே. கோல்சர் — 01
- ★ புகைக் குண்டு — 01
- ★ கிட்பாக் — 03
- ★ ரெயின்கோட் — 02
- ★ தலைக்கவசம் — 01
- ★ சிவில் தொப்பி — 01

### கொழும்பு

லப்பிட்டியில் 143 பேரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் தமிழ் தலையாட்டிகள் முன் நிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைப்பை மேலும் பலப்படுத்திக்கொள்ளலாம் என அரசு அஞ்சுகிறது. அடுத்ததாக புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் மேலாதிக்கம் பெற்றிருக்கும் இந்த சூழ்நிலையில் போர்நிறுத்தம் செய்து புலிகளுடன் பேசுவதால் சிங்கள ஆயுதப்படைகளின் மனவுறுதி மேலும் தளர்வடையலாம் எனவும் அரசாங்கம் எண்ணுகிறது. அத்துடன் புலிகளின் கை ஓங்கிய நிலையில் பேசுவதானால் புலிகள் மீது எவ்வித அழுத்தத்தையும் பிரயோகிக்க முடியாது எனவும் அரசு சிந்திக்கிறது. எனவே, போரை தொடர்ந்து நடத்தி இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டவேண்டும் என்பதில் அரசாங்கம் தீவிர அக்கறையாக உள்ளது.

இராணுவத்தை நவீனமயப்படுத்தி இதனை சாதித்துவிடலாம் எனவும் இராணுவ

தலைமைப்பீடம் கருதுகிறது. அதனால் தான் ஒருபுறம் போரை தொடர்ந்து நடத்திக் கொண்டு புலிகள் மீதும், பொதுமக்கள் மீதும் தொடர்ந்து நெருக்குதலை திணித்துக்கொண்டு. மறுபுறம் பேச்சுக்களை நடத்த அரசு விரும்புகிறது.

இந்தஅணுகுமுறையின்அடிப்படையில் புலிகளுடன் இரகசியப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நோக்கில் குவேக்கர்ஸ் சமாதானக் குழுமூலம் புலிகளுக்கு சில யோசனைகளை சமர்ப்பித்திருக்கிறது ஆனால், போரையும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்தும் இந்த யோசனைகள் தமிழரின் நலன்களுக்கு பாதகமாக அமையும் என்பதால் இதனை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்'' என்று அவர்மேலும் தெரிவித்தார்.

# மணலாற்றில் வீரச்சாவு


லெப். வரதன் (மைக்கல்)


லெப். மணியம் (சுகுமார்)


லெப். மறைக்கோன் (சிறிதரன்)


லெப். முத்தழகு (டியூட்டோன்)


வீரவேங்கை கலைவாணி


வீரவேங்கை மரியாள்


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்.

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுத்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மேற்படி அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு 13-12-92 ஞாயிற்றுக் கிழமை இன்று காலை 10 00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறும். அதிர்ஷ்ட இலாபச்சீட்டுக்கள் வாங்கியவர்கள் குலுக்கல் நடைபெறும்போது அவ்விடத்தில் சமுகமளிக்க வேண்டுகின்றோம்.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்,
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
12-12-1992. (சி-5583)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**12.12.92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7077

வடபகுதிக்கு உள்ளே சென்ற வாகன இலக்கம்;

24-6639, 42-3732, 26-0523, 27-0089, 24-9938, 26-5244 27-5822, 41-5417, 42-0630, 22-6832, 28-4367, 26-2786 24-5967, 42-9625

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்:

28-0657, 24-1259, 27-7538, 28-9037, 26-4885, 24-4875 22-3379, 26-4139, 28-8229, 26-1285, 27-9756, 24-0922, 41-6177, 28-4545, 26-2502, 26-4648, 26-4792, 26-2391, 24-4664, 27-4769 22-0777, 24-0098


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.